# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.

தலைமை இடம் - சென்னை.

| | | |
|---|---|---|
| **S.நாகராஜன்** | **K.சந்திரசேகரன்,B.A** | **B.தியாகராஜன், M.Com.,** |
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |


கடித எண்: 41/19

பெறுநர், 19.02.2019

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2

பெருமதிப்பிற்குரிய ஐயா,

பொருள் : இந்திய பாராளுமன்றத் தேர்தல் அறிவிப்பு நன்னடத்தை விதிகள் அமுலுக்கு வருவதற்கு முன் வாரிய ஊழியர்கள் தொடர்பான பிரச்சனைகளில் உரிய உத்திரவுகளை வழங்கிட வேண்டுகோள்.

*********

கீழ்கண்டவற்றை தங்களது மேலான கவனத்திற்கு உரிய அவசர நடவடிக்கைகள் மேற்கொண்டிட வேண்டி கொண்டு வர விரும்புகின்றோம்.

இந்திய நாட்டின் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் மார்ச்சுமாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என நம்புகின்றோம். அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு விட்டால் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுல்படுத்தப்பட்டு ஊழியர்கள் தொடர்பான பிரச்சனைகளில் உத்திரவுகள் வழங்கி அமுல்படுத்துவது இயலாது. எனவே கீழ்கண்ட பிரச்சனைகளில் உரிய உத்திரவுகளை உடனடியாக வழங்கிட ஆவன செய்திட வேண்டுகின்றோம்.

**I. பதவி உயர்வுகள்:**

கீழ்கண்ட பொறுப்புகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கிட தகுதிகாண் அறிக்கை பெறப்பட்டு பதவி உயர்வுகள் வழங்கப்படாமல் உள்ளது.

(அ). கணக்கு உதவியாளர்.
(ஆ). உதவி நிர்வாக அலுவலர்.
(இ). நிர்வாக உதவியாளர்.
(ஈ). கணக்கு மேற்பார்வையாளர்.
(உ). மதிப்பீட்டாய்வாளர்.
(ஊ). விநியோக வட்டங்களில் கம்பியாளர், மின்பாதை ஆய்வாளர், முகவர் முதல் நிலை, சிறப்பு நிலை முகவர், வணிக உதவியாளர் மற்றும் வணிக ஆய்வாளர்.

மேற்கண்ட பொறுப்புகளுக்கான பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்பட வேண்டும்.

**II. விருப்ப ஊர்மாறுதல்:**

இந்த ஆண்டு சனவரி மாதம் பல்வேறு பணித்தொகுப்பைச் சார்ந்த அலுவலர்களும் ஊழியர்களும் விருப்பமாறுதல் கோரி விண்ணப்பங்கள் சமர்ப்பித்து மாறுதல்களுக்காக காத்துக் கொண்டுள்ளனர். காலியாக உள்ள பொறுப்புகளுக்கெதிராக விருப்பமாறுதல் கோரியுள்ளவர்களுக்கு விருப்ப ஊர்மாறுதல் உத்திரவுகள் வழங்கி அவர்களை பணியிலிருந்து விடுவித்து மாறுதல் பெறும் இடங்களில் பணியில் சேர்ந்திட அனுமதிக்க வேண்டும்.

III. ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பதவி உயர்வு பட்டியல்களில் இடம்பெற்று பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்படாமல் உள்ள கீழ்கண்ட பொறுப்புகளில் காலியாக உள்ள பொறுப்புகளுக்கெதிராக பதவி உயர்வுகள் வழங்கிட வேண்டும்.
(அ). உதவி கணக்கு அலுவலர்.
(ஆ). மதிப்பீட்டு அலுவலர்.
(இ). முதுநிலை மதிப்பீட்டு அலுவலர்.
IV. பல்வேறு பணித்தொகுப்புகளிலும் ஏற்கனவே பதவி உயர்வு பெற்று வேறு இடங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மறு ஒதுக்கீடு கோரி காத்திருப்பவர்களின் விண்ணப்பங்களை பரிசீலித்து மறு ஒதுக்கீடு உத்திரவுகள் வழங்கிட வேண்டும்.

**V. உள்முகத் தேர்வு:**

கணக்கு இளநிலை உதவியாளர் பொறுப்புகளுக்கு உள்முகத் தேர்வு மூலம் நியமனம் பெற விண்ணப்பித்துள்ள ஊழியர்களின் விண்ணப்பங்களை பரிசீலித்து தகுதி உடையவர்களுக்கு உடன் நியமனம் வழங்கிட வேண்டும்.

**VI. வேலைபளு ஒப்பந்தப்படி பொறுப்புகள் அனுமதி:**

22-02-2018 அன்று மின்வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 12(3)ன் கீழ் ஏற்பட்ட வேலைபளு திருத்த ஒப்பந்தப்படி களப்பிரிவு, வருவாய்ப்பிரிவு, மின்கட்டணக் கணக்கீடு மற்றும் வசூல் பிரிவு, பண்டக சாலைப் பிரிவு ஆகியவைகட்கு அனுமதிக்கப்பட வேண்டிய பொறுப்புகளுக்கு உடனடியாக அனுமதி வழங்கிட வேண்டும்.

**VII. வாரிசு வேலைவாய்ப்பு உத்திரவுகள்:**

பணியிலிருக்கும் பொழுது இறந்து விட்ட ஊழியர்களின் வாரிசுகள் கருணை அடிப்படையில் வாரியத்தில் வேலைவாய்ப்பு வழங்கிட கோரி சமர்ப்பித்து வாரிய தலைமை அலுவலகத்தில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை பரிசீலித்து தகுதி உடையவர்களுக்கு நியமன ஆணைகள் வழங்கிட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளில் உரிய உத்திரவுகளை உடனடியாக வழங்கி ஆவன செய்திட வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் : தலைமைப்பொறியாளர் / பணிஅமைப்பு அவர்களுக்கு தகவலுக்காகவும், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகவும் வழங்கப்படுகிறது.